8- ம் வகுப்பு- கணிதம் -ஒரு மதிப்பெண் தேர்வு

பாடம்:எண்கள்   ஆக்கம்: கோ.இளவரசு

1. $\frac{8}{9}$ கிடைக்க ________ என்ற எண்ணை $\frac{-6}{11}$ இலிருந்து கழிக்க வேண்டும்.

(அ) $\frac{34}{99}$ (ஆ) $\frac{-142}{99}$ (இ) $\frac{142}{99}$ (ஈ) $\frac{-34}{99}$

2. பின்வரும் சோடிகளில் எது சமான எண்களின் சோடியாகும்?

(அ) $\frac{-20}{12}, \frac{5}{3}$ (ஆ) $\frac{16}{-30}, \frac{-8}{15}$ (இ) $\frac{-18}{36}, \frac{-20}{44}$ (ஈ) $\frac{7}{-5}, \frac{-5}{7}$

3. . $\frac{-5}{4}$ என்ற விகிதமுறு எண்ணானது ________ ஆகியவற்றின் இடையில் அமையும்.

(அ) 0 மற்றும் $\frac{-5}{4}$ (ஆ) $-1$ மற்றும் 0 (இ) $-1$ மற்றும் $-2$ (ஈ) $-4$ மற்றும் $-5$

4. பின்வரும் விகிதமுறு எண்களில் எது மிகப் பெரியது?

(அ) $\frac{-17}{24}$ (ஆ) $\frac{-13}{16}$ (இ) $\frac{7}{-8}$ (ஈ) $\frac{-31}{32}$

5. $\frac{112}{528}$ இன் எளிய வடிவில் உள்ள பகுதியின் இலக்கங்களின் கூடுதல்

(அ) 4 (ஆ) 5 (இ) 6 (ஈ) 7

6. $\frac{3}{4}+\frac{5}{6}+\left(\frac{-7}{12}\right)$ இன் திட்ட வடிவம் __________ ஆகும்.

(அ) 1 (ஆ) $\frac{-1}{2}$ (இ) $\frac{1}{12}$ (ஈ) $\frac{1}{22}$

7. $\left(\frac{3}{4}-\frac{5}{8}\right)+\frac{1}{2}=$ __________.

(அ) $\frac{15}{64}$ (ஆ) 1 (இ) $\frac{5}{8}$ (ஈ) $\frac{1}{16}$

8. $\frac{3}{4}\div\left(\frac{5}{8}+\frac{1}{2}\right)=$ __________.

(அ) $\frac{13}{10}$ (ஆ) $\frac{2}{3}$ (இ) $\frac{3}{2}$ (ஈ) $\frac{5}{8}$

9. $\frac{3}{4}\times\left(\frac{5}{8}\div\frac{1}{2}\right)=$ __________.

(அ) $\frac{5}{8}$ (ஆ) $\frac{2}{3}$ (இ) $\frac{15}{32}$ (ஈ) $\frac{15}{16}$

10. இவற்றுள் எந்த விகிதமுறு எண்ணிற்கு கூட்டல் நேர்மாறு உள்ளது?

(அ) 7 (ஆ) $\frac{-5}{7}$ (இ) 0 (ஈ) இவை அனைத்திற்கும்

LIVEWORKSHEETS

11. விகிதமுறு எண்களுக்கு ________ என்ற எண்ணால் அடைவுப் பண்பானது வகுத்தலுக்கு உண்மையாகாது.

(அ) 1 (ஆ) $-1$ (இ) 0 (ஈ) $\frac{1}{2}$

12. $\frac{1}{2}-\left(\frac{3}{4}-\frac{5}{6}\right)\neq\left(\frac{1}{2}-\frac{3}{4}\right)-\frac{5}{6}$ என்பது கழித்தலானது, விகிதமுறு எண்களின் ________ப் பண்பினை நிறைவு செய்யாது என்பதை விளக்குகிறது.

(அ) பரிமாற்று (ஆ) அடைவு (இ) பங்கீட்டு (ஈ) சேர்ப்பு

13. பின்வருவருனவற்றுள் எது கூட்டலின் நேர்மாறுப் பண்பினை விளக்குகிறது?

(அ) $\frac{1}{8}-\frac{1}{8}=0$ (ஆ) $\frac{1}{8}+\frac{1}{8}=\frac{1}{4}$ (இ) $\frac{1}{8}+0=\frac{1}{8}$ (ஈ) $\frac{1}{8}-0=\frac{1}{8}$

14. $\frac{3}{4}\times\left(\frac{1}{2}-\frac{1}{4}\right)=\frac{3}{4}\times\frac{1}{2}-\frac{3}{4}\times\frac{1}{4}$ என்பது, பெருக்கலானது ________ இன் மீது பங்கீடு செய்கிறது என்பதை விளக்குகிறது.

(அ) கூட்டல் (ஆ) கழித்தல் (இ) பெருக்கல் (ஈ) வகுத்தல்

15. 43 இன் வர்க்கமானது _______ என்ற இலக்கத்தில் முடியும்.

(அ) 9 (ஆ) 6 (இ) 4 (ஈ) 3

16. $24^2$ உடன் _______ ஐக் கூட்டினால் $25^2$ ஐ பெறலாம்.

(அ) $4^2$ (ஆ) $5^2$ (இ) $6^2$ (ஈ) $7^2$

17. $\sqrt{48}$ இன் தோராய மதிப்பானது _______ இக்குச் சமம்.

(அ) 5 (ஆ) 6 (இ) 7 (ஈ) 8

18. $\sqrt{128}-\sqrt{98}+\sqrt{18}=$

(அ) $\sqrt{2}$ (ஆ) $\sqrt{8}$ (இ) $\sqrt{48}$ (ஈ) $\sqrt{32}$

19. 123454321 இன் வர்க்கமூலத்திலுள்ள இலக்கங்களின் எண்ணிக்கையானது _______ ஆகும்.

(அ) 4 (ஆ) 5 (இ) 6 (ஈ) 7

20. $(-4)^{-1}$ உடன் எந்த எண்ணைப் பெருக்கினால், பெருக்கலானது $10^{-1}$ என ஆகும்?

(அ) $\frac{2}{3}$ (ஆ) $\frac{-2}{5}$ (இ) $\frac{5}{2}$ (ஈ) $\frac{-5}{2}$

21. $(-2)^{-3}\times(-2)^{-2}$ என்பது ______ ஆகும்.

(அ) $\frac{-1}{32}$ (ஆ) $\frac{1}{32}$ (இ) 32 (ஈ) $-32$

22. எது சரியல்ல?

(அ) $\left(\frac{-1}{4}\right)^{2}=4^{-2}$ (ஆ) $\left(\frac{-1}{4}\right)^{2}=\left(\frac{1}{2}\right)^{4}$ (இ) $\left(\frac{-1}{4}\right)^{2}=16^{-1}$ (ஈ) $-\left(\frac{1}{4}\right)^{2}=16^{-1}$

23. $\frac{10^x}{10^{-3}}=10^9$ எனில் $x$ ஆனது ______ ஆகும்.

(அ) 4 (ஆ) 5 (இ) 6 (ஈ) 7

24. 0.0000000002020 இன் அறிவியல் குறியீடு ______ ஆகும்.

(அ) $2.02\times10^{9}$ (ஆ) $2.02\times10^{-9}$ (இ) $2.02\times10^{-8}$ (ஈ) $2.02\times10^{-10}$

LIVEWORKSHEETS